MALAI MALAR 01 APR 2008

# இலவச மருத்துவ முகாம்

பல்லடத்தை அடுத்த வாவிபாளையம் கிராமத்தில் உள்ள ஈஷா கிராம மருத்துவமனையில் இலவச பல், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை மற்றும் பொது மருத்துவ முகாம் நடந்தது. ஈஷா யோக மையம் வாவிபாளையம் கிராம மக்கள் நல அமைப்புடன் இணைந்து இம் முகாம் நடத்தப்பட்டது. வாவிபாளையம் பஞ்சாயத்து தலைவர் பார்த்தசாரதி இம்முகாமை தொடங்கி வைத்தார்.

இதில் 100-க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு பல் சுத்தம் செய்தல், பல் பிடுங்குதல், பற்குழி அடைத்தல் உள்பட காது, மூக்கு, தொண்டை பிரச்சினைகளுக்கு இலவச பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற்றனர். டாக்டர்கள் அவர்களுக்கு சிகிச்சை அளித்தனர்.